# புதிய அனுபவம்

காலம் காலமாகச்
சேர்த்து வைத்திருந்த அனுபவங்கள்
கை கொடுக்காமல் போகிறது
எதிர்பாராத தருணங்களில்

அதிர்வுற்ற அந்த கணங்களில்
வேதனைகளின் வீரியங்கள்
உடலெங்கும் பரவுகின்றன

ஏமாற்றங்களையும் துக்கங்களையும்
அணிந்துகொண்டிருக்கும் அந்த கணத்தில்
வாழ்க்கை புதிய அனுபவங்களை
கற்றுத்தரத் தொடங்குகிறது

செப்புத் தகட்டின் எழுத்துக்களாய்
இழப்புக்களின் தடங்கள்
வேதனையையும் விரக்தியையும்
என்னுள் கீறிப் பதிக்கிறது

வேறுவழியில்லாமல்
பவ்யமாய் மீண்டும் அனுபவங்களை
கற்கத் தொடங்குகிறேன்
எதிர்காலத்திற்காக

# சோழனின் சிம்மாசனம்

நவீன அரும்பொருளகத்தின்
குளிரூட்டப்பட்ட காட்சியறையில்

பாரம்பரியக் கலையால்
செதுக்கப் பட்ட சிம்மாசனமொன்று
உடைந்த ஒற்றைக்காலோடு நிற்கிறது
சோழனின்  பெருமையைப் பறைசாற்றியவாறே

வரைபடமும் குறிப்புகளும்
காலத்தையும் நிகழ்வுகளையும்
உரக்கக்கூறி அறைமுழுவதும்
மௌனத்தை நிரப்பி இருக்கிறது

என்னின் வெற்றுப் பெருமைகளும்
தமிழனென்ற தம்பட்டங்களும் உதிர்ந்து
இயலாமையும் அவமானங்களும்
உடலெங்கும் அப்பிக்கொள்கின்றன

பழைய வரலாற்றை மட்டுமே பேசுபவர்களைப்
பார்க்க மட்டுமே அனுமதிக்கிறது
'தொடாதீர்கள்' வாசகம்

# மரணத் தருணம்

கரிசனமான மனிதர்களின்
முகங்கள் மனம் முழுவதும்
நிரம்பிக் கிடக்கின்றன

தட்டுத் தடுமாறி இவ்வுலகின் மீது
ஏறி நின்ற போதிலிருந்தே
என் மனதுக்கு
இதமான உணவளித்துப் பக்குவப்படுத்தும்
உன்னதம் வேறு வேறு
ஆத்மாக்களால் நிகழ்ந்துகொண்டேயிருக்கிறது

நெடிய கால அடுக்குகளின்
ஊடாக உட்சென்று
விதையின் உள்தங்கும்
உயிராகச் சேர்கின்றன அனுபவங்கள்

சுருங்கிய தோல் போர்த்திய
முற்றிய உடலுக்குள்
காத்திருக்கிறது ஒரு ஆலமரம்
விழுந்ததும் முளைப்பதற்கு

# அவள்

வழக்கமற்ற
பரிச்சயமில்லாத உரையாடல்களோடு
சிலிர்ப்பும் பயமும் சேர்ந்த
இன்ப அதிர்வுகளோடு
அறிமுகமானாள்

முடியாத சண்டைகளோடும்
தீராத அன்பை மேலும் மேலும்
பரிமாறுகிறாள்

அவளின்றி இருக்கும்
வெற்றிடத்தைக் காற்றால் கூட
நிரப்ப முடியாத போது
இதயம் எப்படித் துடிக்கும்
இமைகள் எப்படித் அசையும்

அவளோடு சேர்ந்தே நானும்
காற்றில் கலக்கும்
அற்புதத் தருணத்தைப்
பிறிதொரு நாளின்றி
இப்போதே தாராயோ

# இழப்பின் வலி

தொண்டைக்குழித் தவிப்பு
தண்ணீர் குடித்தும் தீர மறுக்கிறது

சுவையற்ற அனுபவங்களை உண்ணப்
பல வருடங்களாகப் பழக்கப் பட்டிருக்கிறேன்

இருப்பதை விட்டுப்
பறப்பதைப் பிடிக்கப் பறக்கிறது
பாழாய்ப்போன மனம்

பறப்பது கையில் வந்தும்
இல்லாததைத் தேடி அலைகிறது

கையை விட்டுப் போனவைகளுக்கும்
கையில் இல்லாதவைகளுக்கும்
மதிப்பு அதிகமாகிறது

இருப்பதை அனுபவித்து பறப்பதைப் பிடிக்கும்
இரகசியம் அறிந்திருந்தால்
இழப்புகளின் தவிப்பு இருந்திருக்காது

தொண்டைக்குழி வறட்சி
தண்ணீர் குடித்தும் தீர மறுக்கிறது